**தலைமை நீதித்துறை நடுவர்  நீதிமன்றம், புதுக்கோட்டை**

**முன்னிலை . திரு.K.S.பால்பாண்டியன்,  B.A., B.L.,**
**தலைமை குற்றவியல் நீதிபதி,  புதுக்கோட்டை**

**2026–ம் ஆண்டு ஜூன்  திங்கள் 08ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 138/2018**

(முதல் நிலை பதிவு வழக்கு எண்.29/2018)
(மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்  நீதிமன்றம், ஆலங்குடி)

| **வ.எண்.** | **தலைப்புகள்** | **விவரங்கள்** |
|---|---|---|
| 1. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | ஆலங்குடி காவல் நிலையம்,<br>குற்ற எண்.166/2013 |
| 2. | எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி | **1. ரவிக்குமார்,**<br>த/பெ.ராஜு,<br>பள்ளிவாசல் தெரு,<br>ஆலங்குடி.<br>**2. சங்கர் கணேஷ்,**<br>த/பெ.ராஜு,<br>பள்ளிவாசல் தெரு,<br>ஆலங்குடி. |
| 3. | சம்பவ தேதி | 14.06.2013 |
| 4. | புகார் அளித்த தேதி | 14.06.2013 |
| 5. | கைது செய்யப்பட்ட தேதி | 1ம் எதிரி– 15.06.2013<br>2ம் எதிரி– 15.06.2013 |

| | | |
|---|---|---|
| 6. | பிணையில் விடுவிக்கப்பட்ட தேதி | 1ம் எதிரி– 05.07.2013<br>2ம் எதிரி– 05.07.2013 |
| 7. | எதிரிகளிடம் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவப்பட்ட நாள். | 12.03.2019 |
| 8. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 18.05.2026 |
| 9. | விசாரணை துவங்கிய நாள் | 17.02.2021 |
| 10. | விசாரணை முடிவுற்ற நாள் | 13.05.2026 |
| 11. | தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நாள் | 08.06.2026 |
| **வ.எண்.** | **தலைப்புகள்** | **விவரங்கள்** |
| 1. | குற்றமுறையீட்டாளரின் பெயர்: | காவல் ஆய்வாளர்,<br>ஆலங்குடி காவல் நிலையம்,<br>ஆலங்குடி.<br>குற்ற எண்.166/2013 |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்: | 1. ரவிக்குமார்,<br>2. சங்கர் கணேஷ், |
| 3. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்: | எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 326 மற்றும் 307ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதில் : | குற்றவாளிகள் அல்ல. |

| | | |
|---|---|---|
| 5. | இந்நீதிமன்றத்தின் தீர்மானம்: | முடிவாக, இந்த வழக்கின் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 326 மற்றும் 307ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகிய சான்றுபொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது. |
| 6. | தண்டனை அல்லது உத்தரவு | இல்லை. |

இவ்வழக்கானது புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.01.2019 தேதியில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 27.05.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் அரசு தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.B.சிவசங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் M.ஜெயந்தன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆழ்ந்து வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 326 மற்றும் 307ன் கீழ் குற்றம்சாட்டி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

இந்த வழக்கின் எதிரிகளுக்கும் புகார்தாரரின் குடும்பத்தாருக்கும் இடையே நடைபாதை பிரச்சினை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. 14.06.2013 தேதியில் இரவு சுமார் 08.15 மணியளவில் புகார்தாரரும், அவரது குடும்பத்தாரும் வீட்டில் இருந்தபோது புகார்தாரரின் சித்தப்பா மகன் சித்திரைக்கண்ணு என்பவர் அவருடைய சைக்கிளை தள்ளிக்கொண்டு எதிரிகளின் வீட்டு வழியாக வந்தபோது 1வது எதிரி மேற்படி சித்திரைக்கண்ணுவை பார்த்து "ஏன்டா தேவிடியா குச்சிகாரி மகனே இந்த பாதையில சைக்கிளை தள்ளிக்கொண்டு வர" என்று சத்தம் போடவும், புகார்தாரரின் அம்மா வீரம்மாள் வீட்டிலிருந்து வெளியே வந்து, "ஏண்டா பாதையில வரவன திட்டுற" என்று 1வது எதிரியை பார்த்து கேட்டதும் 1வது எதிரி மேற்படி வீரம்மாளை பார்த்து அசிங்கமாக பேசி "உன்னைக்கொன்னுட்டா இங்கு யாரும் வரமாட்டார்கள்" என்று கூறிக்கொண்டே அவர் கையில் வைத்திருந்த அருவாளின் பின்புறத்தால் வீரம்மாளின் வலது முன்கையில் ஓங்கி அடித்தார். புகார்தாரரின் அம்மா வீரம்மாள் வலி தாங்க முடியாமல் கத்தவும், அங்கு வந்த 2வது எதிரி அவர் கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரின் அம்மாவை "இத்தோடு செத்து தொலைந்துபோடி" என்று சொல்லிக்கொண்டே ஓங்கி வெட்டினார். அந்த வெட்டை வீரம்மாள் அவரது இடது கையால் தடுத்தபோது இடது பின்கையில் வெட்டுபட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. அதை பார்த்த 1வது எதிரி, வீரம்மாளை பார்த்து அசிங்கமாக பேசி "இத்தோடு செத்து ஒழிந்துபோடி"

என்று கூறிக்கொண்டே அவர் கையில் வைத்திருந்த அருவாளால் வீரம்மாளின் நடுத்தலையில் ஓங்கி வெட்டவும் தலையில் காயம்பட்டு வீரம்மாள் கீழே விழுந்தார். அங்கு ஓடி வந்த புகார்தாரரையும் 2வது எதிரி அருவாளால் வலது கையில் வெட்டினார். இதைப் பார்த்த அங்கு நின்று கொண்டிருந்த நபர்கள் சத்தம் போட்டுகொண்டு ஓடி வரவும், 1,2 எதிரிகள் அருவாளுடன் அங்கிருந்து ஓடிவிட்டனர். மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட நபர்களை அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததில் நடந்த சம்பவம் குறித்து புகார்தாரர் புகார் வாக்குமூலம் அளித்துள்ளார். அதைத் தொடர்ந்து எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 307ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 15.06.2013 தேதியில் காலை 11.00 மணியளவில் சாட்சிகளின் முன்னிலையில் எதிரிகள் கைது செய்யப்பட்டு 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதனடிப்படையில் வழக்கு சான்று பொருட்களான அருவாள்கள் 1வது எதிரி மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது. காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த அரசு மருத்துவர் வீரம்மாளுக்கு கைகளில் ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயங்கள் என்றும், தலையில் ஏற்பட்டிருந்த காயம் சிறிய காயம் என்றும், அதேபோல் புகார்தாரருக்கு வலது கையில் ஏற்பட்டிருந்த காயம் சிறிய காயம் என்று சான்று அளித்துள்ளதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி),324,326 மற்றும் 307 இ.த.சவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) ஆலங்குடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்கள் இவ்வழக்கின் கோப்புகளை ஆராய்ந்து முதல்நிலை பதிவு வழக்கு எண்.29/2018 என கோப்பிற்கு எடுத்து எதிரிகளை ஆஜராக உத்தரவிட்டு, எதிரிகள் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு வழக்கு நகல்களை வழங்கி, முதல் நிலை விசாரணை மேற்கொண்டு கு.வி.மு.ச.பிரிவு 209–ன் கீழ் மாண்பமை

புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மாண்பமை புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கினை கோப்புக்கு எடுத்து இந்நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு அனுப்பியுள்ளது.

**4)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 326 மற்றும் 307ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்தார்கள். எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்த காரணத்தால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**5)** இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.14 வரையிலான சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகிய சான்றுபொருள்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6)** **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

**6.1)** **அ.சா.1.செல்வம் (எ) மாரியப்பன்** தனது சாட்சியத்தில், தான் கடந்த 14.06.2013 அன்று இரவு 8.15 மணியளவில் தனது சித்தப்பா மகன் சித்திரைக்கண்ணு சைக்கிளை ஓட்டிக்கொண்டு தங்கள் வீட்டிற்கு 1 வது

எதிரியின் வீட்டு வழியாக வந்தபொழுது, ஏற்கனவே தங்களுக்கும் ரவிக்குமார் வீட்டிற்கும் சந்து சம்மந்தமாக தகராறு இருந்ததால், சித்திரைக்கண்ணுவை பார்த்து தேவடியா மகனே, குச்சிக்கார மகனே என்று திட்டி ஏண்டா இந்த பாதையில் வந்தாய் என்று கேட்டதாகவும், அப்போது தன் அம்மா வீரம்மாள் எதிரிகளை பார்த்து ஏன்டா இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்டதாகவும், அப்போது எதிரிகள் ஆளுக்கொரு அருவாளை எடுத்துக்கொண்டு வந்து ரவிக்குமார், அரிவாளை பின்புறமாக திருப்பி கட்டையால் தனது அம்மாவின் முன் கையில் அடித்துவிட்டதாகவும், தன்னை சங்கர் கணேஷ் இவளை கொன்றால்தான் நம்மளுக்கு நிம்தி என்று சொல்லி அரிவாளால் தனது அம்மாவின் வலது கையில் வெட்டியதாகவும், தான் தடுக்க சென்றபோது தன் வலது கையில் வெட்டியதாகவும், 1 வது எதிரி ரவிக்குமார் தனது தாயாரை இவளை கொன்றுவிடவேண்டும் என்று சொல்லி நடு தலையில் வெட்டியதாகவும், பக்கத்தில் உள்ளவர்கள் தன்னையும், தனது தாயாரையும் அழைத்துச்சென்று ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அதன்பிறகு புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்றதாகவும், ஆலங்குடி அரசு மருத்துவமனையில் போலிசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கி கொண்டதாகவும், அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், மேலும் தனது சாட்சியத்தில் நீதிமன்றத்தில் தன்னிடம் காண்பிக்கப்பட்ட நீளமான அருவாள் முதல் எதிரி ரவிக்குமார் என்பவர் தனது தயாரை நடு மண்டையில் தாக்க பயன்படுத்திய அருவாள் என்றும் அது சா.பொ.1 என்றும், அதே போன்று தன்னிடம் காண்பிக்கப்படுகின்ற சற்று நீளம் குறைவாக உள்ள அருவாளால் தான் இரண்டாவது எதிரி சங்கர் கணேஷ் தனது வலது உள்ளங்கை ஓரத்தில் வெட்ட பயன்படுத்தியது அது சா.பொ.2 என்றும், தன்னுடைய தாயார் 2015 ஆம் ஆண்டு இறந்துபோய்விட்டதாகவும், தன் தாயார் வீரம்மாளை முதல் எதிரி

ரவிக்குமார் தலையில் வெட்ட வந்ததை வலதுகையால் தடுத்தபோது வலது கை மொழிக்கு கீழ் பகுதியிலும் வெட்டுப்பட்டதாகவும், அதேபோல் இடது கை மொழிக்கு கீழ் பகுதியிலும் வெட்டுப்பட்டதாகவும், நடு மண்டையில் வெட்டியதில் நரம்பு வெட்டுப்பட்டதாகவும், பின்னர் காயம்பட்ட தன்னையும் தனது தாயாரையும் சம்பவ இடத்திலிருந்து ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு முதலில் கொண்டு சென்றதாகவும், பின்னர் மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், புதுக்கோட்டையிலிருந்து தன் தாயாருக்கு தலையில் வெட்டிய வெட்டால் மூளை நரம்பு பாதிக்கப்பட்டது என்றும், தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்ததாகவும், தான் 3 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாகவும், தஞ்சை மருத்துவமனையில் தனது தாயார் சுமார் 10 நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.2) அ.சா.2.சித்திரைக்கண்ணு** தனது சாட்சியத்தில், தான் கடந்த 14.06.2013 அன்று இரவு சுமார் 8.15 மணியளவில் தான் தனது வேலையை முடித்துவிட்டு அருகில் இருந்த வாடகை சைக்கிள் கம்பெனியில் வாடகை சைக்கிள் ஒன்று எடுத்துக்கொண்டு ஆஜர் எதிரிகளின் வீட்டு வழியாக உள்ள பாதையில் சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது முதல் எதிரி ரவிக்குமார் தன்னைப்பார்த்து ஏன்டா தேவடியா மகனே என்றும், நீ ஒரு அப்பனுக்கு பிறந்தியா என்றும், எப்படி என் பாதையில் வரலாம் என்றும் பேசியதாகவும், அப்போது எதிரிகளின் வீட்டிற்கு அருகில் உள்ள தன்னுடைய பெரியம்மா வீரம்மாள் அவருடைய வீட்டின் வாசலில் இருந்தவர் முதல் எதிரியை பாத்து ஏன் பாதையில் நடந்து வருகின்றவனை திட்டுகிறாய் என்று கேட்டதாகவும், அப்போது முதல் எதிரி ரவிக்குமார் தன் பெரியம்மாள் வீரம்மாளை பார்த்து தேவடியா மகளே என்றும், உன்னால் தான் எல்லோரும் இங்கு

வருகிறார்கள் என்று பேசியதாகவும், உடனே முதல் எதிரி தன் கையில் வைத்திருந்த அருவாளால் வீரம்மாளை அடிக்கச் சென்றார் என்றும், அதை பார்த்து தடுக்கச்சென்ற தன்னை இரண்டாவது எதிரி சங்கர் கணேஷ் பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், தான் கீழே விழுந்த சமயத்தில் முதல் எதிரி ரவிக்குமார் வீரம்மாளை நடுத்தலையை சா.பொ.1 ஆல் வெட்டிவிட்டார் என்றும், உடனே தன் பெரியம்மாவின் அலறல் சத்தம் கேட்டு வீட்டிற்குள் இருந்த அண்ணன் செல்வம், மாரிக்கண்ணு, தம்பி நாடிமுத்து ஆகியோர் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார்கள் என்றும், அப்போது வெளியே வந்த என்னுடைய அண்ணன் செல்வத்தை இரண்டாவது எதிரி சங்கர் கணேஷ் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் செல்வத்தை அவர் கையில் வெட்டிவிட்டார் என்றும், அதில் செல்வதற்கு எந்த கையில் எந்த இடத்தில் வெட்டுப்பட்டது என்று நெடுநாள் ஆகிவிட்டதால் தனக்கு ஞாபகம் இல்லை என்றும், சம்பவம் நடந்த உடன் எதிரிகள் இருவரும் தப்பித்து ஓடிவிட்டார்கள் என்றும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுகின்ற சா.பொ.2 ஆல் தான் 2வது எதிரி சாட்சி செல்வத்தை கையில் வெட்ட பயன்படுத்தினார் என்றும், பின்னர் அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து காயம்பபட்ட செல்வம், வீரம்மமாளை ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், தான் மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும், தன்னுடைய பெரியம்மா வீரம்மாள் வீட்டிற்கு செல்ல நடபாதை சம்பந்தமாக உள்ள விரோத்தில் எதிரிகள் தங்களை தாக்கிவிட்டார்கள் என்றும், வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளித்துள்ளார்.

**6.3) அ.சா.3.மாரிக்கண்ணு** தனது சாட்சியத்தில், கடந்த 14.06.2013 அன்று இரவு 08.15 மணியளவில் சாட்சி சித்திரைக்கண்ணு சைக்கிளை தள்ளிக்கொண்டு தங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார் என்றும், அந்த

சமயத்தில் தான் தனது குழந்தைகள், கணவர், கொழுந்தன் ஆகியோருடன் வீட்டிலிருந்ததாகவும், அப்போது முதல் எதிரி ரவிக்குமார் எப்படி என் வீட்டின் வாசல் வழியாக வருகிறாய் என்று குச்சிக்காரி, தேவுடியா மகனே என்று சத்தம் போட்டதாகவும், அந்த சத்தம் கேட்டு முதலில் தன் மாமியார் வீரம்மாளும் அதைத் தொடர்ந்து தாங்களும் வீட்டைவிட்டு வெளியே வந்ததாகவும், அப்போது தன் மாமியார் வீரம்மாள் முதல் எதிரி ரவிக்குமாரைப்பார்த்து ஏன்டா பிள்ளைகள் வரும் போது இப்படி திட்டுகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு முதல் எதிரி ரவிக்குமார் இந்த தேவுடியா இருக்குற வரைக்கும் எல்லோரும் வருவார்கள் என்றும், இவரைக்கொன்றால் யாரும் வரமாட்டார்கள் என்றும் முதல் எதிரி சொல்லி அருவாளை எடுத்துக்கொண்டு அருவாள் பிடங்கால் முதல் எதிரி வலது புறங்கையில் தனது மாமியாரை அடித்துவிட்டதாகவும், தொடர்ந்து 2வது எதிரி அருவாளை எடுத்து தன் மாமியாரை நோக்கி வெட்டியதாகவும், அதை அவர் இடது கையால் தடுத்த பொழுது இடது உள்ளங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் தொடர்ந்து முதல் எதிரி இன்னும் இந்த தேவுடியா சாகவில்லையா என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த அருவாளால் தன் மாமியார் வீரம்மாளின் உச்சந்தலையில் ஓங்கி வெட்டியதாகவும், அப்போது இதை பார்த்து தடுக்க வந்த தனது கணவர் செல்வத்தை அருவாளால் இரண்டாவது எதிரி சங்கர் கணேஷ் வலது கையில் சுண்டு விரலுக்கு அருகில் வெட்டி காயம் ஏற்படுத்திவிட்டதாகவும், பின்னர் எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டதாகவும், பின்னர் காயம்பட்ட தன் கணவர் மற்றும் மாமியாரை 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்ததாகவும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுகின்ற சா.பொ.1 ஆன பெரிய அருவாளால் தான் முதல் எதிரி ரவிக்குமார் தன் மாமியாரைத் தாக்கியதாகவும், 2வது எதிரி சங்கர் கணேஷ் நீளம் சற்று குறைவாக உள்ள சா.பொ.2 அருவாளால் தன் மாமியாரையும் தன்

கணவரையும் தாக்கியதாகவும், ஆலங்குடி அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு தன் கணவரையும் மாமியாரையும் கொண்டுபோய்சேர்த்ததாகவும், பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தன் மாமியாரை அனுப்பிவைத்ததாகவும், வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்க விவரம் சொல்லியதகாவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.4) அ.சா.4.தினேஷ்** தனது சாட்சியத்தில், தானும் தனது நண்பர் சித்திரைக்கண்ணு என்பவரும் 14.06.2013 அன்று இரவு 08.15 மணியளவில் சித்திரைக்கண்ணு சைக்கிளை தள்ளிக்கொண்டு வர தான் அவரது பின்னால் நடந்து சென்று கொண்டிருந்ததாகவும், தானும் சித்திரைக்கண்ணும் முதல் எதிரி ரவிக்குமாரின் வீட்டின் அருகில் வரும் பொழுது முதல் எதிரி ரவிக்குமார் ஏன்டா தேவுடியா பயலே இந்த ரோட்டில் வருகிறாய் என்று சித்திரைக்கண்ணுவை பார்த்து முதல் எதிரி பேசியதாகவும், அப்போது வீரம்மாள் வந்து ஏன் இப்படி பேசுகிறாய் என்று முதல் எதிரியைப்பார்த்து கேட்டதாகவும், அப்போது முதல் எதிரி வீரம்மாளைப்பார்த்து உன்னால் தான் பிரச்சனை என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த அருவாள் பிடங்கால் வலது கையில் வீரம்மாளை தாக்கியதாகவும், பின்னர் சங்கர் கணேஷ் என்ற எதிரி அருவாள் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து இடது கையில் வெட்டியதாகவும், அதை அவர் தடுத்த போது இடது கையில் உள்ளங்கை அருகே பட்டு காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் முதல் எதிரி வீரம்மாளைப்பார்த்து நீ இன்னும் சாகவில்லையா என்று சொல்லி அருவாளால் உச்சந்தலையில் வீரம்மாளை வெட்டியதாகவும், அப்போது வீட்டிற்குள் இருந்து வந்த சாட்சி செல்வம் சம்பவத்தை விலக்க முற்பட்ட போது ரவி என்ற எதிரி கையில் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்திவிட்டதாகவும், எந்த கை என்பது தற்பொழுது தனக்கு ஞாபகம் இல்லை என்றும், பின்னர் காயம்பட்ட

வீரம்மாளையும் செல்வத்தையும் சிகிச்சைக்காக ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்ததாகவும், பின்னர் தான் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், பாதை பிரச்சனையால் எதிரிகள் இவ்வாறு தகராறு செய்ததாகவும், வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொல்லியுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.5) அ.சா.5.நாடிமுத்து** தனது சாட்சியத்தில், கடந்த 14.06.2013 அன்று தான் வீட்டில் இருந்தபோது தன்னுடைய அண்ணன் சித்திரைக்கண்ணு சைக்கிளை தள்ளிக்கொண்டு தங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், அப்பொழுது முதல் எதிரி ரவிக்குமார் தன்னுடைய அண்ணனைப்பார்த்து ஏன்டாதேவுடியா பயலே இந்த பாதையில் வருகிறாய் என்று திட்டியதாகவும், அதைப்பார்த்த தன்னுடைய பெரியம்மா வீரம்மாள் முதல் எதிரியிடம் ஏன்டா இப்படி திட்டுகிறாய் என்று கேட்டதாகவும், உடனே முதல் எதிரி ரவிக்குமார் அருவாளால் தன்னுடைய பெரியம்மா வீரம்மாளை வெட்ட வந்ததாகவும், அப்போது முதல் எதிரி ரவிக்குமார் அருவாளால் தன்னுடைய பெரியம்மா வீரம்மாளின் கையில் வெட்டிவிட்டதாகவும், சங்கர் கணேஷ் என்ற 2வது எதிரி, அவர் ஒரு அருவாளை எடுத்துக்கொண்டு வந்து தன்னுடைய பெரியம்மா வீரம்மாளின் கையில் வெட்டிவிட்டதாகவும், பின்னர் முதல் எதிரி ரவிக்குமார் நீ இன்னும் செத்துத்தொலையவில்லையா என்றும், நீ செத்தால் தான் யாரும் வரமாட்டார்கள் என்று சொல்லி அருவாளால் தன் பெரியம்மாவை தலையில் வெட்டிவிட்டதாகவும், பின்னர் எதிரிகளை பிடிக்க முற்பட்ட போது அவர்கள் ஓடிவிட்டதாகவும், பின்னர் தன்னுடைய அண்ணன் செல்வத்தை எதிரி ரவிக்குமார் கையில் இருந்த அருவாளால் வெட்டிவிட்டதாகவும், எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டதாகவும், பின்னர் காயம்பட்ட அண்ணன் மற்றும் பெரியம்மாளை ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

அனுப்பி வைத்தனர் என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்க விவரம் சொல்லியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.6) அ.சா.6 ராஜா (எ) சாகுல் ஹமீது,** தனது சாட்சியத்தில் தான் ஆலங்குடியில் வசித்து வருவதாகவும், வாட்டர் கம்பெனி வைத்து தொழில் செய்து வருவதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள முதலாவது சாட்சிக்கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தினை தன் வீட்டிற்கு பின்புறத்தில் உள்ள இவ்வழக்கு சம்பவ இடத்திற்கு சம்பவ தினத்தன்று இரவு 10.30 மணியளவில் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிய பொழுது பார்வை மகஜரில் கண்டுள்ள முதலாவது கையொப்பத்தை செய்து கொடுத்தனர் என்றும், தன்னோடு சிதம்பரம் என்பவரும் சாட்சிக்கையொப்பம் செய்து கொடுத்தாகவும், அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ–2 என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் எதிரி ரவிக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள முதலாவது சாட்சிக்கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தினை ஆலங்குடி காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள முதலாவது சாட்சிக்கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ–3, இதே போன்று தன்னிடம் காண்பிக்கப்படுகின்ற கைப்பற்றுதல் மகஜரில் கண்டுள்ள முதலாவது சாட்சிக்கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும், 15.06.2013 12.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சிக்கையொப்பமும், 15.06.2013 12.45 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜரில் கண்டுள்ள முதலாவது சாட்சிக்கையொப்பமும் தன்னுடையது தான் என்றும், அவை இரண்டையும் எதிரிகளின் வீட்டின் அருகே உள்ள கருவைக்காட்டிலிருந்து நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுகின்ற சா.பொ.1, 2 ஐ கைப்பற்றியதற்கு ஆதரவாக அதே இடத்தில்

கைப்பற்றுதல் மகஜர் ஆய்வாளர் தயார் செய்ததாகவும், அதில் அதே இடத்தில் வைத்து மேற்சொன்ன சாட்சிக்கையொப்பங்களை செய்து கொடுத்தனர் என்றும், அந்த மகஜர்கள் அ.த.சா.ஆ.4,5 என்றும், ஆஜர் எதிரிகள் இருவரையும் தனக்குத் தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.7) அ.சா.7.சிதம்பரம்** தனது சாட்சியத்தில், தான் ஆலங்குடியில் வசித்து ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளதாகவும், சாட்சி ராஜா என்ற சாகுல் அமீது என்பவரை தனக்குத் தெரியும் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள இரண்டாவது சாட்சிக்கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தினை இவ்வழக்கு சம்பவ இடத்தினை சம்பவ தினத்தன்று போலீசார் பார்வையிட்ட போது சம்பவ இடத்தில் வைத்து செய்து கொடுத்தார் என்றும், அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுளளது. அதே போன்று தன்னிடம் காண்பிக்கப்படும் முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ–6, அதே போன்று தன்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ–4 மற்றும் 5 இல் கண்டுள்ள இரண்டாவது சாட்சிக்கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும், அவற்றை 15.06.2013 அன்று மதியம் 12.30 மணியளவில் சா.பொ.1, 2 ஐ முதல் எதிரி வீட்டிற்கு அருகில் உள்ள கருவைக்காட்டிலிருந்து முதல் எதிரி அடையாளம் காண்பித்து போலீசார் கைப்பற்றியதற்கு ஆதரவாக அந்த இடத்தில் தயார் செய்ததில் மேற்சொன்ன சாட்சிக்கையொப்பங்களை செய்து கொடுத்தாகவும், எதிரிகள் இருவரையும் தனக்குத் தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.8) அ.சா.8.விஜயலெட்சுமி** தனது சாட்சியத்தில், தான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் நுண்கதிர் பிரிவில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணியாற்றி செப்டம்பர் மாதம் 2013 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுள்ளதாகவும், தான் பணியில் இருந்தபோது 18.06.2013 அன்று வீரம்மாள் என்ற 55 வயது மதிக்கத்தக்க நபர் தங்கள் பிரிவிற்கு நுண்கதிர் படம் எடுப்பதற்காக அனுப்பட்டிருந்ததாகவும், அவருக்கு நெஞ்சுப்பாகம், இடது உள்ளங்கை பாகமும் நுண்கதிர்படம் எடுக்கப்பட்டதாகவும், நெஞ்சுப்பாகத்தில் எலும்பு முறிவு இல்லை என்றும், இடது உள்ளங்கை படத்தில் 3 வது உள்ளங்கை விரல் எலும்பு உடைந்து காணப்பட்டதாகவும், மேற்சொன்ன நபருக்கு இடது கையில் ஏற்பட்டிருந்த எலும்பு முறிவு காயத்தை குறிப்பிட்டு கருத்துரை வழங்கியதாகவும், அந்த கருத்து அ.த.சா.ஆ.7 என்றும், மேற்சொன்ன காயம் கம்பால் தாக்கியதால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு என்றும், வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.9) அ.சா.9.இங்கர் சால்** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருவதாகவும், தான் கடந்த 14.06.2013 அன்று இரவு புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் பணியிலிருந்தபோது ஆலங்குடி அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக அனுப்பட்ட செல்வம், த/பெ. சுந்தரம் பள்ளிவாசல் வீதி, ஆலங்குடி என்பவரை உள்நோயாளியாக அனுமதித்தாகவும், அவருடைய வலது கையில் இருந்த காயத்தால் வலது கை நுண்கதிர்படம் எடுத்துப்பார்த்ததில் எலும்பு முறிவு இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டதாகவும், அவர் 17.06.2013 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், அவரை விடுவித்த மருத்துவரின் கருத்துரு சாதாரண காயம் என்று கூறியிருந்தாகவும், தன்னை

இது சம்மந்தமாக ஆலங்குடி காவல் ஆய்வாளர் விசாரித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.10) அ.சா.10.முத்தையன்** தனது சாட்சியத்தில், தான் கடந்த 14.06.2013 அன்று இரவுப்பணியில் இருக்கும்போது செல்வம் என்ற நபர் தன்னை இனம் தெரிந்த இரண்டு நபர்கள் அரிவாளால் அன்று இரவு 8.15 மணியளவில் அதல் ஒருவர் அரிவாளால் தாக்கியதாக கூறி மருத்துவ சிகிச்சைக்காக ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும், அவருக்கு கீழ்க்கண்ட காயம் காணப்பட்டதாகவும், காயம் 1, வலது கையின் உள்பக்கத்தில் சுண்டு விரலூரக்கு கீழ் ஒரு வெட்டுக்காயம் 10x3 செ.மீ. அளவில் காணப்பட்டதாகவும், அவருக்கு முதல் சிகிச்சை தையல் போட்டு மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும், அவர் அங்கு உள்நோயாளியாக 14.06.2013 முதல் 17.06.2013 வரை சிகிச்சை பெற்றதாகவும், அவருக்கு கதிர் வீச்சு படம் எடுக்கப்பட்டு சாதாரண காயம் என்று சான்று அளிக்கப்பட்டதாகவும், மேற்சொன்ன நபருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ.9 என்றும், வீரம்மாள் என்ற 55 வயது மதிக்கத்தக்க ஒருவர் சித்திரைக்கண்ணு என்ற அவரது மகனால் மேற்கூறிய தேதியில் கடந்த 9 மணியளவில் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்ததாகவும், அவருக்கு மேற்கூறிய சம்பவம் அன்று இரவு 8.45 மணியளவில் நடந்ததாக கூறினார் என்றும், அவர் தன்னை இனம் தெரிந்த இரண்டு நபர்கள் அரிவாள் கொண்டு தாக்கியதாக கூறினார் என்றும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டதாகவும், காயம் 1. தலையின் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வரை நீண்டிருந்த ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது என்றும், அதன் அளவு 15x1 செ.மீ. ஆகும் என்றும், காயம் 2. இடது கையின் உள்பகுதியில் 3x1x1 செ.மீ அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டதாகவும், காயம் 3. வலது முன்கையில்

இரத்தம் கன்றிய காயம் காணப்பட்டதாகவும், அவர் மேல்சிகிச்சைகாக புதுக்கோட்டை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கா அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், அவர் 14.06.2013 முதல் 18.06.2013 வரை புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவமனையிலும், 18.06.2013 முதல் 29.06.2013 வரை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், அவருக்கு மேற்கூறிய காயம் 1. சாதாரண காயம் என்றும், காயம் 2, 3 கொடுங்காயங்கள் என்று சான்று அளித்துள்ளதாகவும், தான் வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.10 என்றும், மேற்சொன்ன இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்டிருந்த காயங்கள் அவர்கள் சொன்ன நேரத்திலும் விதத்திலும் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.11) அ.சா.11.கீதா** தனது சாட்சியத்தில், தான் கடந்த 14.06.2013 அன்று ஆலங்குடி காவல்நிலைய உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது ஆலங்குடி அரசு மருத்துவமனையிலிருந்து 21.00 மணியளவில் வரப்பெற்ற தகவலைப்பெற்று அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆலங்குடி, பள்ளிவாசல் தெருவைசேர்ந்த சுந்தரம் மகன் செல்வம் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் சேர்ந்து நிலைய குற்ற எண்.166/2013 பிரிவு 294(பி), 324, 307 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து, வழக்கின் புகார்மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும், ஆலங்குடி நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தாகவும், ஒரு நகலை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்கு வைத்ததாகவும், தான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.11 என்றும், வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார் என்றும் சாட்சியம்

அளித்துள்ளார்.

**6.12) அ.சா.12.சமரசம்** தனது சாட்சியத்தில், தான் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்சமயம் தஞ்சாவூரில் வசித்து வருவதாகவும், கடந்த 14.06.2013 அன்று தான் ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் கீதா என்பவர் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு தனக்கு அனுப்பியிருந்த ஆலங்குடி காவல்நிலைய குற்ற எண்.166/2013, பிரிவு 294(பி), 324, 307 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகலை பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் அந்த தினம் 22.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான ஆலங்குடி பள்ளிவாசல் தெரு, வாதியின் வீட்டு முன் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜா என்ற சாகுல் ஹமீது, சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு அ.த.சா.ஆ.12 மாதிரி வரைபடம் மற்றும் அ.த.சா.ஆ.2 பார்வை மகஜர் ஆகியன தயார் செய்ததாகவும், இவ்வழக்கில் சாட்சிகள் செல்வம் என்ற மாரியப்பன், சித்திரைக்கண்ணு, வீரம்மாள், ரெத்தினம், மாரிக்கண்ணு, தினேஷ், நாடிமுத்து, ராஜா என்ற சாகுல் ஹமீது, சிதம்பரம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் 15.06.2013 அன்று காலை 11 மணிக்கு ஆலங்குடி டவுன் பாத்தம்பட்டி முக்கம் பேருந்து நிறுத்தம் அருகில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை ரவிக்குமார், சங்கர் கணேஷ் ஆகியோரை கைது பற்றிய காரணம் கூறி கைது செய்ததாகவும், சாட்சிகள் ராஜா என்ற சாகுல் ஹமீது, சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் எதிரி ரவிக்குமாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.13 என்றும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 15.06.2013, 12.30 மணிக்கு எதிரி ரவிக்குமார் பயன்படுத்திய வழக்கில் சம்மந்தப்பட்ட தடயமான அரிவாளை எதிரி

ரவிக்குமார் வீட்டிற்கு அருகில் இருந்த கருவைக்காட்டில் இருந்து சாட்சிகள் ராஜா என்ற சாகுல் ஹமீது, சிதம்பரம் முன்னிலையில் கைபற்றினார் என்றும், பின்னா 12.45 மணிக்கு மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் எதிரி சங்கர் கணேஷ் பயன்படுத்திய மொத்தம் 44 செ.மீ. நீளமுள்ள அரிவாள் ஒன்றை மகஜரில் கைப்பற்றியதாகவும், பின்னா எதிாகள் மற்றும் கைப்பற்றப்பட்ட தடயங்களுடன் காவல்நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், மகஜரில் கைப்பற்றப்பட்ட தடயச்சொத்துக்களை படிவம் 91 இன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், இத்துடன் பணியிட மாறுதல் பெற்றுச்சென்றதால் வழக்கு கோப்பினை நிலையபொறுப்பு அலுவலரிடம் ஒப்படைத்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.13) அ.சா.13.பன்னீர் செல்வம்** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் இதற்கு முன்பு புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது தனக்கு முன்பு ஆலங்குடி காவல் ஆய்வாளர் திரு.சமரசம் அவர்கள் புலன் விசாரணை செய்த குற்ற எண்.166/2013, பிரிவு 294(பி), 324, 307 இதச வழக்கினை தனது புலன் விசாரணைக்கு 09.05.2014 அன்று எடுத்துக்கொண்டு சம்பவத்தின் காயம்பட்ட நபருக்க சிகிச்சை அளித்த டாக்டர். முத்தையா அரசு மருத்துவமனை, ஆலங்குடி. டாக்டர்.லிங்கர்சா அரசு மருத்துவமனை புதுக்கோட்டை, டாக்டர். சுதாகர் டாக்டர்.விஜயலெட்சுமி அரசு மருத்துவமனை தஞ்சாவூர் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவர்கள் கொடுத்த மருத்துவ கருத்துரையின் அடிப்படையில் வீரம்மாள் என்பவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் ஏற்கனவே 294(பி), 324, 307 இதச வழக்கினை சட்டப்பிரிவு மாற்றறிக்கை தயார் செய்து 294(பி), 326, 324,

307 இதசவின் கீழ் மாற்று அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 326, 307 இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.14) அ.சா.14.சுதாகரன்** தனது சாட்சியத்தில், தான் தற்போது தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரியில் பொதுப்பிரிவில் மூத்த பேராசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 18.06.2013 அன்று மாலை 6.00 மணியளவில் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது சுமார் 55 வயது மதிக்கத்தக்க வீரம்மாள் என்பவர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அவரது விபத்து பதிவேடு எண்.335634 என்றும், அவரை மேல்சிகிச்சைக்காகவும், மேல் பரிசோதனைக்காகவும் உள்நோயாளியாக அனுமதித்ததாகவும், மேற்சொன்ன விபரங்களை வீரம்மாள் என்பவருக்கு வழங்கப்பட்ட மருத்துவக்கருத்துரையில் பதிவு செய்துள்ளதாகவும், மேற்சொன்ன நபருக்கு பரணி, எம்.எஸ். என்பவர் சிகிக்சை அளித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313–ன் படி எதிரிகளிடம் கேள்விகள் எழுப்பியதில் அவைகள் பொய் சாட்சியம் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும் எடுத்துரைத்ததால் எதிரிகள் தரப்பு சாட்சியத்திற்கு கால அவகாசம் வழங்கிய நிலையில் எதிரிகள் பக்கம் யாரும் சாட்சிகளாக விசாரித்துக்கொள்ளப்படாததால் எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லை என்று

முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**8) இந்நிலையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

இவ்வழக்கின் எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 326 மற்றும் 307ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9) <u>தீர்வு.</u>**

அ.சா.1 சாட்சியின் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே நடைபாதை பிரச்சனை காரணமாக முன்விரோதம் இருந்து வந்ததாகவும், 14.06.2013 தேதியில் இரவு சுமார் 08.15 மணியளவில் அ.சா.1 சாட்சி அவருடைய வீட்டிற்குள் இருந்தபோது எதிரிகளின் வீட்டு வாசல் வழியாக அ.சா.1ன் சித்தப்பா மகனான அ.சா.2 சித்திரைக்கண்ணு என்பவர் சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்தவரை பார்த்து இந்த வழக்கின் 1வது எதிரி, ஏன்டா தேவுடியா குச்சிகாரி மகனே இந்த பாதையில சைக்கிளை தள்ளிக்கொண்டு வர என்று சத்தம் போட்டதாகவும் அதற்கு அ.சா.1ன் தாயார் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து ஏன்டா பாதையில வரவனை திட்டுற என்று கேட்ட போது தேவுடியா கண்டார ஓழி உன்னால தான்டி எல்லோரும் இங்கே வராங்க என்றும், வழக்கு சம்பவத்தின் இடையில் 2வது எதிரி அ.சா.1ன் தாயாரை அருவாளால் வெட்டும்போது அவர் தடுக்கவும், 1வது எதிரி கண்டார ஓழி சாகமாட்டேங்குறாளே என்று அசிங்கமாக பேசியதற்காகவும் 1வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவு 294(பி)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி குறித்து அ.சா.1 சாட்சி நீதிமன்றத்தின் முன்னர் சாட்சியமளிக்கும்போது சம்பவ சமயத்தில் 1வது எதிரி, அ.சா.2 சாட்சியான சித்திரைக்கண்ணுவை பார்த்து தேவுடியா மகனே குச்சிகாரி

மகனே என்று திட்டியதாக சாட்சியமளித்திருந்தபோதிலும் மேற்படி அசிங்கமான வார்த்தைகளினால் பாதிக்கப்பட்டதாக சொல்லும் அ.சா.2 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது சம்பவ சமயத்தில் 1வது எதிரி, அ.சா.2 சாட்சியை பார்த்து தேவுடியா மகனே என்றும், நீ ஒரு அப்பனுக்கு பிறந்தியா என்றும் அசிங்கமாக பேசியதாக முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

**10)** அ.சா.2 சாட்சியை அசிங்கமாக பேசியதாக சொல்லும் மேற்படி வார்த்தைகளை அ.சா.2 சாட்சி அரசுதரப்பு சங்கதிக்கு மாறுபட்டு சாட்சியமளித்துள்ளதாகவே தெரியவருகிறது. மேற்படி சங்கதி குறித்து அ.சா.1 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது 1வது எதிரி, அ.சா.2 சாட்சியை பார்த்து குறிப்பிட்ட வார்த்தைகளை கூறி அசிங்கமாக பேசியதாக சாட்சியம் அளித்திருந்தபோதிலும் அ.சா.2 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது 1வது எதிரி, அ.சா.1 சாட்சியின் தாயாரை அருவாளால் வெட்டிய பிறகு அவருடைய அலறல் சத்தம் கேட்டு தான் அ.சா.1 சாட்சி வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்ததுபோல் சாட்சியமளித்துள்ளார். அவ்வாறான சமயத்தில் அந்த சம்பவத்திற்கு முன்பாக அ.சா.2 சாட்சியை 1வது எதிரி அசிங்கமாக திட்டியதாக சொல்லும் சங்கதி குறித்து அ.சா.1 சாட்சிக்கு நேரிடையாக தெரிய வாய்ப்பில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** இந்த வழக்கின் 1வது எதிரி, அ.சா. 2 சாட்சியை பார்த்து அசிங்கமாக பேசியதாக சொல்லும் சங்கதி குறித்து அ.சா.3 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணையின் போது 1வது எதிரி, அ.சா.2 சாட்சியை பார்த்து குச்சிகாரி, தேவுடியா மகனே என்று சத்தம் போட்டதாக கூறியிருந்தபோதிலும் அ.சா.3 சாட்சி அந்த இடத்திற்கு எப்போது வந்தார் என்று அ.சா.1 சாட்சியோ அல்லது மேற்படி அசிங்கமான வார்த்தைகளினால் பாதிக்கப்பட்டதாக சொல்லும் அ.சா.2

சாட்சியோ சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதற்குமேலும், அ.சா.3ன் மாமியாரான வீரம்மாள் என்பவரை 1,2 எதிரிகள் அருவாளால் தாக்கிய பிறகு 1 வது எதிரி மேற்படி வீரம்மாளை அசிங்கமாக பேசிய சங்கதி குறித்தும் அ.சா.3 சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாகவே சாட்சியமளித்துள்ளார். அனைத்திற்கும் மேலாக, சம்பவத்தின்போது அ.சா.2 சாட்சியுடன் அங்கு வந்ததாக சொல்லும் அ.சா.4 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணையில் அ.சா.2 சாட்சியை பார்த்து 1வது எதிரி அசிங்கமாக பேசியதாக சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதேபோல், மற்றொரு சம்பவ இட சாட்சியான அ.சா.5 சாட்சி தன்னுடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது 1வது எதிரி, அ.சா.2 சாட்சியை பார்த்து அசிங்கமாக பேசியதாக முழுமையாக அரசுதரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை.

**12)** வழக்கு சம்பவத்தின்போது 1வது எதிரி அ.சா.1 சாட்சியின் தாயாரான வீரம்மாளை அருவாளால் தாக்கும்போது கண்டார ஒழி சாகமாட்டேங்குறாளே என்று அசிங்கமாக பேசி தாக்கியதாக அரசுதரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் அந்த சங்கதி குறித்தும் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சம்பவ சாட்சிகள் எவரும் அரசுதரப்பு வழக்கை அப்படியே ஆதரித்து சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதற்கும்மேலாக, மேற்படி சாட்சிகள் எவரும் 1வது எதிரியால் பயன்படுத்தப்பட்ட மேற்படி அசிங்கமான வார்த்தைகளினால் அங்கிருந்த தங்களுக்கோ அல்லது மற்ற நபர்களுக்கோ அது அருவருப்பாகவும், தொல்லை தருவதாகவும் இருந்தது என்று இ.த.ச.பிரிவு 294(பி)ன் கீழான வகையங்களை நிரூபிப்பதுபோல் சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதனால், 1வது எதிரியை இ.த.ச.பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்தின்படி குற்றம் சாட்டி தண்டிக்க இயலாது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13)** இந்த வழக்கின் எதிரிகளுக்கும் அ.சா.1 சாட்சியின் குடும்பத்திற்கும் இடையே இருந்த பாதை சம்மந்தமான பிரச்சனையின் காரணமாக வழக்கு சம்பவத்தின்போது அ.சா.1 சாட்சியின் தாயாரான வீரம்மாளை கொலை செய்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1,2 எ திரிகள் அவர்கள் கையில் வைத்திருந்த அருவாளால் வெட்டி கொலை முயற்சி செய்ததாக 1,2 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவு 307ன் கீழ் அரசுதரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.1 சாட்சி அவருடைய புகார் மனுவிலும், போலீஸ் விசாரணையின்போதும் சம்பவ சமயத்தில் எதிரிகள் அ.சா.1 சாட்சியின் தாயாரை தாக்கும்போது 1 வது எதிரி, அ.சா.1 சாட்சியின் தாயாரை பார்த்து உன்னை கொன்னுப்புட்டா இங்கு யாரும் வரமாட்டாண்டி என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த அருவாள் பின்புறத்தால் அ.சா.1 சாட்சியின் தாயாருடைய வலது முன்கையில் ஓங்கி அடித்ததாக கூறியுள்ளார். ஒரு நபரை கொலை செய்யும் நோக்கத்தோடு அருவாளால் தாக்கும்போது அவருடைய உயிரை பறிக்கும் விதத்தில் கழுத்து போன்ற பகுதிகளில் வெட்டி இறப்பை ஏற்படுத்த முன்வருவார்களே தவிர கையில் வைத்திருக்கும் அருவாளின் பின்புற கட்டை பகுதியால் கையில் அடித்து காயம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

**14)** அந்த சம்பவத்திற்கு பிறகு 1வது எதிரியின் தம்பியான 2வது எதிரி அவர் கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1 சாட்சியின் அம்மாவை இத்தோடு செத்து தொலைந்துபோடி என்று சொல்லிக்கொண்டே ஓங்கி வெட்டியதாக மட்டுமே அ.சா.1 அவருடைய புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளாரே தவிர அந்த சமயத்திலும் அ.சா.1 சாட்சியின் தாயாரை 2வது எதிரி கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் கழுத்தை நோக்கி வெட்டியதாக குறிப்பிட்டு கூறியிருக்கவில்லை. அதன்பிறகு, 1வது எதிரி, அ.சா.1 சாட்சியின் தாயாரை தலையில் ஓங்கி வெட்டியதாக சாட்சியமளித்திருந்தபோதிலும் அந்த காயம் சிறிய

காயம் என்றே மருத்துவரால் சான்று வழங்கியிருப்பதை பரிசீலிக்கும்போது 1வது எதிரி அ.சா.1 சாட்சியின் தாயாரை கொலை செய்யும் நோக்கத்தோடு தலையில் வெட்டியிருக்க வாய்ப்பில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15)** அ.சா.1 சாட்சி அவருடைய புகாரிலும், நீதிமன்ற முதல் விசாரணையின்போதும் சம்பவ சமயத்தில் எதிரிகள் அ.சா.1 சாட்சியின் தாயாரான வீரம்மாள் என்பவரை கொன்றுவிட வேண்டுமென்ற நோக்கத்தில் அருவாளால் தாக்கியதுபோல் கூறியிருந்தபோதிலும் சம்பவ இட சாட்சியான அ.சா.2 சாட்சி தன்னுடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது அ.சா.1 சாட்சியின் தாயாரை 1வது எதிரி நடுத்தலையில் வெட்டியபிறகு அலறல் சத்தம் கேட்டு தான் வீட்டுக்குள்இருந்த அ.சா.1 சாட்சி அவருடைய மனைவி மற்றும் தம்பி ஆகியோர் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்ததாக சாட்சியமளித்துள்ளதை பரிசீலிக்கும்போது எதிரிகள் அ.சா.1 சாட்சியின் தாயாரை வெட்டியதாக சொல்லும் சங்கதியை அ.சா.1 நேரில் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** வழக்கு சம்பவத்தின்போது அ.சா.1 சாட்சியின் தாயாரான வீரம்மாள் என்பவரை எதிரிகள் அருவாளால் வெட்டியதாக சொல்லும் சங்கதி குறித்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 சாட்சி தன்னுடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது 1வது எதிரி எடுத்த எடுப்பிலேயே மேற்படி வீரம்மாளை நடுத்தலையில் வெட்டியதாக மட்டுமே சாட்சியமளித்துள்ளார். அதுதவிர, அ.சா.1 சாட்சியின் தாயாரை 1வது எதிரி அருவாள் பிடங்கால் வலது கையில் காயம் ஏற்படுத்தியதாகவோ அல்லது 2வது எதிரி அ.சா.1 சாட்சியின் தாயாரை அருவாளால் இடது கையில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவோ சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை.

**17)** மற்றொரு சம்பவ இட சாட்சியான அ.சா.3 சாட்சி சம்பவத்தில் காயம்பட்ட வீரம்மாளின் மருமகள் ஆவார். அவர் அ.சா.1 சாட்சியின் தாயாரை 1வது எதிரி வெட்டியபிறகு அந்த அலறல் சத்தம் கேட்டு தான் வீட்டிற்கு வெளியே வந்து சம்பவத்தை பார்த்தார் என்பதுபோல் அ.சா.2 சாட்சி சாட்சியமளித்துள்ளதை பரிசீலிக்கும்போது அ.சா.1 சாட்சியின் தாயாரை 1,2 எதிரிகள் வெட்டி காயப்படுத்தியதாக சொல்லும் சங்கதியை அ.சா.3 சாட்சி நேரில் பாத்திருப்பாரா என்று சந்தேகம் எழுகிறது. இந்த வழக்கில் சம்பவ இட சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ள உறவுக்காரர்கள் ஆவார்கள். அதிலும், மேற்படி சாட்சிகளுக்கு 1,2 எதிரிகளுடன் பாதை சம்பந்தமாக பலகாலமாக பிரச்சனை இருந்துவரும் சூழ்நிலையில் 1,2 எதிரிகள் மீது குற்றம் சாட்டும் வகையில் வழக்கு சங்கதிகளை தொடர்புபடுத்தி சாட்சியமளிக்க வாய்ப்புள்ளது. சம்பவ இட சாட்சிகளில் அ.சா.4 சாட்சி மட்டும் அ.சா.2 சாட்சியின் நண்பராக அடையாளம் காணப்பட்டுள்ளார். அ.சா.4 சாட்சியும் அவருடைய சாட்சியத்தின்போது 1வது எதிரி வீரம்மாளை அருவாளால் உச்சந்தலையில் வெட்டும்போது தான் அ.சா.1 சாட்சி வீட்டிற்குள் இருந்து வெளியே வந்ததாகவும் அப்போது அ.சா.1 சாட்சி சண்டையை விலக்க முற்பட்டபோது 1வது எதிரி அ.சா.1 சாட்சியின் கையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். உண்மையில், வழக்கு சம்பவத்தின்போது 2வது எதிரி தான் அ.சா.1 சாட்சியை வலது கையில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாக அரசுதரப்பு வழக்கு அமைந்துள்ளது. அதேபோல், மற்றொரு சம்பவ இட சாட்சியான அ.சா.5 சாட்சியும் 1வது எதிரி தான் அ.சா.1 சாட்சியை அருவாளால் வெட்டியதாக அரசுதரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகளின் மேற்படி சாட்சியங்களை பரிசீலிக்கும்போது அரசுதரப்பில் எடுத்துரைத்திருப்பதுபோன்று

அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகள் சம்பவ இடத்திலிருந்து சம்பவத்தை நேரில் பார்த்திருப்பார்களா? என்று இந்நீதிமன்றத்திற்கு பலத்த சந்தேகம் எழுகிறது. அதனால், எதிரிகளை இ.த.ச.பிரிவு 307ன் கீழ் குற்றம் சாட்டி தண்டிக்க இயலாது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18)** வழக்கு சம்பவத்தின்போது, அ.சா. 1 சாட்சியின் தாயாரை 1வது எதிரி அருவாள் பிடங்கால் வலது கையில் தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும், 2வது எதிரி அ.சா.1 சாட்சியின் தாயாரை இடது கையில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், மேற்படி காயம் மருத்துவரின் பரிசீலனையில் கொடுங்காயங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் எதிரிகள் மீது அரசுதரப்பில் இ.த.ச.பிரிவு 326ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அரசுதரப்பு வழக்கை கவனமாக பரிசீலிக்கும்போது எதிரிகளுக்கும் அ.சா.1 சாட்சியின் குடும்பத்திற்கும் இடையில் நடைபாதை சம்பந்தமாக பலகாலமாக பிரச்சினை இருந்து வந்துள்ளது. அ.சா.1 சாட்சியின் தாயாரை எதிரிகள் வெட்டியதாக சொல்லும் சங்கதி குறித்து அ.சா.1 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தின்போது 1வது எதிரி, வீரம்மாளை தலையில் வெட்ட வந்ததாகவும், அதை வலது கையால் தடுத்தபோது வலது கை மொழிக்கு கீழ் பகுதியில் வெட்டுப்பட்டு காயம் ஏற்பட்டதுபோல் அரசுதரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 சாட்சியின் தாயாரான வீரம்மாளுக்கு 1வது எதிரியால் வலது கை மொழிக்கு கீழ் காயம் எதுவும் ஏற்பட்டதாக அரசுதரப்பு வழக்கு அமைந்திருக்கவில்லை.

**19)** வழக்கு சம்பவம் குறித்து சம்பவத்தை நேரில் பார்த்ததுபோல் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அனைவரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய இரத்த சம்பந்த உறவுக்காரர்கள்

ஆவார்கள். மேற்படியார்களில் அ.சா.4 சாட்சி மட்டும் அ.சா.2 சாட்சியின் நண்பர்போல் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளார். அவரும் அ.சா.1 சாட்சியை வெட்டி காயம் ஏற்படுத்தியது குறித்து அரசுதரப்பு வழக்கை ஆதரிக்காமல் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 சாட்சியுடன் அ.சா.4 சாட்சியும் சம்பவ சமயத்தில் உடன் வந்ததுபோல் அ.சா.2 சாட்சி சாட்சியம் எதுவும் அளித்திருக்காத சூழ்நிலையில் அ.சா.4 சாட்சி தாம் அ.சா.2 சாட்சியின் நண்பர் என்று கூறிக்கொண்டு சம்பவ சமயத்தில் அவரும் அ.சா.2 சாட்சியுடன் சம்பவ சமயத்தில் உடன் வந்ததாக கூறியிருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. அ.சா.4 சாட்சியை தவிர்த்து மற்ற சம்பவ இட சாட்சிகள் அனைவரும் உறவுக்காரர்கள் என்பதால் அவர்களுடைய சாட்சியத்தை அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்கான மதிப்புமிகு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடிய இயலவில்லை. அதிலும், அ.சா.5 சாட்சி தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது எதிரிகள், அ.சா.1 சாட்சியின் தாயாரை அருவாளால் வெட்டி காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துவிட்டு அவருடைய குறுக்கு விசாரணையின்போது என்ன பிரச்சினை, என்ன சம்பவம் நடைபெற்றது என்று அ.சா.1 சாட்சி சொல்லிதான் தனக்கு தெரியும் என்பதுபோல் சாட்சியமளித்துள்ளதை பரிசீலிக்கும்போது வழக்கு சம்பவம் குறித்த அ.சா.5ன் சாட்சியத்தை நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

**20)** இந்த வழக்கில் 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதனடிப்படைடியில் வழக்கு சான்றுபொருட்களான அருவாள்கள் எதிரிகளின் வீட்டின் அருகே உள்ள கருவைக்காட்டிலிருந்து கைப்பற்றப்பட்டதாக அரசுதரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ள அ.சா.6 சாட்சி அந்த ஆவணத்தில் ஆலங்குடி காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்து

கொடுத்ததாக அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். சான்று பொருட்களை கைப்பற்றியதற்காக சாட்சியமளித்துள்ள அ.சா.7 சாட்சி, எதிரிகள் வீட்டிற்கு எதிரே குடியிருந்து வரும் நபராவார். அவருக்கும் எதிரிகளுக்கு இடையேயும் அதே பாதை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ளதாகவே தெரியவருகிறது. அவ்வாறான சமயத்தில் அ.சா.7ன் சாட்சியும் நம்பத்தகுந்த சாட்சியமாக அமைந்திருக்கவில்லை. அதிலும், அ.சா.7 சாட்சி பார்வை மகஜர் ஆவணத்திலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சி கையொப்பங்கள் செய்து கொடுத்ததாகவே முதல் விசாரணை சாட்சியத்தின்போது கூறிவிட்டு தன்னுடைய குறுக்கு விசாரணையின்போது போலீசாரிடம் ஒரே ஒரு கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளதை பரிசீலிக்கும்போது அ.சா.7 சாட்சி எடுத்துரைத்திருப்பதுபோல் அவர் முன்பாக 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருக்குமா என்பது குறித்தும் அதனடிப்படையில் வழக்கு சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்குமா? என்பது குறித்தும் சந்தேகமான சூழ்நிலையே எழுகிறது.

**21)** வழக்கு சம்பவத்தின்போது எதிரிகள் தாக்கியதாக கூறி அ.சா.1 சாட்சியின் தாயார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு கைகளில் ஏற்பட்டிருந்த காயங்கள் கொடுமையான காயங்கள் என்று அ.சா.10 அரசு மருத்துவர் சான்று அளித்து அவர் தம்முடைய குறுக்கு விசாரணையில் போலீசார் அவரை விசாரிக்கும்போது வழக்கில் கைப்பற்றப்பட்ட அருவாளை அவரிடம் காட்டி அந்த ஆயுதங்களினால் அ.சா.1 சாட்சியின் தாயார் தாக்கப்பட்டிருக்கும்போது அவர் சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்று புலன் விசாரணை அதிகாரி தம்மிடம் விசாரித்ததுபோல்

சாட்சியமளித்திருந்தபோதிலும் அ.சா.13 புலன் விசாரணை அதிகாரி தம்முடைய குறுக்கு விசாரணையில் அ.சா.10 அரசு மருத்துவரிடம் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் எதையும் காண்பித்து கருத்துரை பெறவில்லை என்பதாகவே சாட்சியமளித்துள்ளார். மேற்படி சங்கதி சம்பந்தமாக அ.சா.10 மற்றும் அ.சா.13 சாட்சிகளின் சாட்சியங்களுக்கிடையே முரண்பாடு இருந்துவருவதாக தெரிகிறது. அனைத்திற்கும்மேலாக இந்த வழக்கில் கொடுங்காயம் பட்டு பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 சாட்சியின் தாயார் வீரம்மாள் அரசுதரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டிருக்கவில்லை–.அதனால், அ.சா.1 சாட்சியின் தாயாருக்கு ஏற்பட்ட கொடுங்காயம் இந்த வழக்கின் எதிரிகளால் தான் ஏற்பட்டதா என்பது குறித்து குறிப்பாக அறிந்து கொள்ள முடியவில்லை. அதனால், அரசுதரப்பில் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச.பிரிவு 326ன் கீழான குற்றசாட்டு குறித்து போதிய அளவில் நிரூபிக்க முன்வந்திருக்கவில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**22)** வழக்கு சம்பவத்தின்போது 2வது எதிரி, அ.சா.1 சாட்சியை வலது கையில் அருவாளால் வெட்டி சிறிய காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக 2வது எதிரி மீது இ.த.ச.பிரிவு 324ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், சம்பவ இட சாட்சிகளான அ.சா.2 சாட்சி தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது அ.சா.1 சாட்சிக்கு எந்த கையில் வெட்டுப்பட்டு காயம் ஏற்பட்டது என்பது குறித்து தெளிவாக சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதேபோல், மற்றொரு சம்பவ சாட்சியான அ.சா.4 சாட்சி தன்னுடைய நீதிமன்ற முதல் விசாரணையின் போது 1வது எதிரி வெட்டியதில் தான் அ.சா.1 சாட்சிக்கு காயம் ஏற்பட்டது போல் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அதை தொடர்ந்து மற்றொரு சம்பவ இட சாட்சியான அ.சா.5 சாட்சியும் அ.சா.1 சாட்சியை 1வது எதிரி தான் வெட்டி காயம் ஏற்படுத்தியதாக முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.1

சாட்சிக்கு ஏற்பட்டிருந்த காயம் குறித்து தனிநபர் சாட்சிகள் எவரும் அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தை தொடர்புபடுத்தி சாட்சியம் அளித்திருக்கவில்லை. அ.சா.1 சாட்சியும் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து அவரை மருத்துவர் விசாரிக்கும்போது எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு கூறி வாக்குமூலம் எதுவும் அளித்திருக்கவில்லை.

**23)** வழக்கு சம்பவம் குறித்து புகார் அளித்துள்ள சங்கதியே வழக்கு சங்கதி குறித்து பலமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அ.சா.1 சாட்சியால் கொடுக்கப்பட்டதாக சொல்லும் புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 சாட்சி கையெழுத்திட்டிருக்கும் சங்கதி அந்த ஆவணம் உண்மையான ஆவணமா என்பது குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அ.சா.1 சாட்சி அதில் கையெழுத்து செய்துள்ள விதத்தை பரிசீலிக்கும்போது வெற்று பேப்பரில் அ.சா.1 சாட்சியிடம் முதலில் கையெழுத்து பெற்றுக்கொண்டு பிற்பாடு அதில் சங்கதிகள் நிரப்பப்பட்டுள்ளதாகவே தெரிகிறது.

**24)** வழக்கு சம்பவம் 14.06.2013 தேதியில் இரவு 08.15 மணியளவில் நடைபெற்றதாக அரசுதரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலமானது மேற்படி தேதியில் இரவு 08.15 மணியளவில் பெறப்பட்டதாக முதலில் பதிவு செய்யப்பட்டு அதன்பின்னர் அது திருத்தப்பட்டு 09.00 மணியளவில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டதுபோல் அதில் கண்டுள்ளது. அந்த சங்கதி குறித்து அரசுதரப்பில் போதுமான விளக்கம் எதுவும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், வழக்கு சங்கதி குறித்து அ.சா.2 சாட்சியும் புகார் வாக்குமூலம் அளித்ததாக அவருடைய சாட்சியத்தின்போது குறிப்பிட்டுள்ளார். அதற்கும்மேலாக, அ.சா.1ன் மனைவியான அ.சா.3 சாட்சி வழக்கு சங்கதி குறித்து காவல் நிலையத்திற்கு சென்று தகவல் சொன்னதாகவும்

சாட்சியமளித்துள்ளார். அ.சா.2, அ.சா.3 சாட்சிகள் வழக்கு சங்கதி குறித்து கொடுத்த புகார் மற்றும் தகவல் என்ன ஆனது என்று அரசுதரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி நபர்களின் சாட்சியங்களிலிருந்து வழக்கு சங்கதி குறித்து யாரால் புகார் அளிக்கப்பட்டது என்பதை முழுமையாக அறிந்துகொள்ள இயலவில்லை. மேற்படி முரண்பட்ட காரணங்களினால் 2வது எதிரியை இ.த.ச.பிரிவு 324ன் கீழ் குற்றம் சாட்டி தண்டிக்க இயலாது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**25)** மேற்படி காரணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதுமான அளவில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**26)** ஆகவே இதன் முடிவில், இந்த வழக்கின் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 326 மற்றும் 307ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகிய சான்றுபொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 08ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K S PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.06.08 18:00:20 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**
**புதுக்கோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்.**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு.செல்வம் (எ) மாரியப்பன் |
| அ.சா.2. | திரு.சித்திரைக்கண்ணு |
| அ.சா.3. | திருமதி.மாரிக்கண்ணு |
| அ.சா.4. | திரு.தினேஷ் |
| அ.சா.5. | திரு.நாடிமுத்து |
| அ.சா.6. | திரு.ராஜா (எ) சாகுல் அமீது |
| அ.சா.7. | திரு.சிதம்பரம் |
| அ.சா.8. | திருமதி.விஜயலெட்சுமி |
| அ.சா.9. | திரு.இங்கர்சால் |
| அ.சா.10. | திரு.முத்தையா |
| அ.சா.11. | திருமதி.கீதா |
| அ.சா.12. | திரு.சமரசம் |
| அ.சா.13. | திரு.பன்னீர் செல்வம் |
| அ.சா.14. | திரு.சுதாகர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3. | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.4. | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.5. | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | மருத்துவ கருத்துரை |
| அ.சா.ஆ.8 | உள்நோயாளி சீட்டு |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடு |

| | |
|---|---|
| அ.சா.ஆ.10 | காயச்சான்று |
| அ.சா.ஆ.11 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.12 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.13 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.14 | சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்.**

| | |
|---|---|
| சா.பொ.1 | மரக்கைப்பிடியுடன் கூடிய சுமார் 47 செ.மீ, முனை வளைந்த இரும்பு அருவாள்–1. அதில் மரக்கைப்பிடியுடன் நீளம் சுமார் 12 செ.மீ உள்ளது. |
| சா.பொ.2 | மரக்கைப்பிடியுடன் கூடிய சுமார் 44 செ.மீ நீளமுள்ள முனை வளைந்த இரும்பு அருவாள் –1. அதில் மரக்கைப்பிடியுடன் நீளம் சுமார் 12 செ.மீ உள்ளது. |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :**

இல்லை.

K S
PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.06.08 18:00:29 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**

**புதுக்கோட்டை.**